









# அமைச்சரும் TC-யும் அதிரடி காண்பார்களா?

இது போன்ற வாகனங்கள் முழுக்க... முழுக்க போக்குவரத்து விதிகளை மீறி 'பாடி' கட்டப்பட்டு, தமிழகத்தில் இருந்து ஆந்திரா, கேரளா, கர்நாடகா, போன்ற பல மாநிலங்களுக்கு 'கறி'க்கான மாடுகளை ஏற்றி சென்னை வழியாக பல்வேறு மாநிலங்களுக்கும் சென்று வருகிறது.

இப்படி, போக்குவரத்து துறை RTO அலுவலக அதிகாரிகளால், இது போன்ற வாகனங்களுக்கு முறைகேடாக தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருவது கண்கூட அறிந்திருந்தும், பொதுச்சாலையில் இயக்கிவருவது தெரிந்தும், இதற்கான உரிய நடவடிக்கைகள் அப்போதைய போக்குவரத்து ஆணையரக அதிகாரிகளாலும், தற்போது உள்ள காவல்துறை உயர் அதிகாரிகளாலும் கூட எடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் தண்டனைக் குள்ளான ஒரு எச்சரிக்கைக்கான உத்தரவுகளை கூட மேற்கண்ட அதிகாரிகளால் விடப்படவில்லை என்பதும் மிகவும் துரதிர்ஷடமான ஒன்றாகும்.

அதேபோல் மாடு கடத்தலுக்கும், இது போன்ற விதிமீறிய இந்த பயணங்களுக்கும் போக்குவரத்து போலிசாரும் அனுமதித்து வருவதால் மட்டுமே ஆங்காங்கு பெரும் விபத்துக்கள் ஏற்பட்டு, பல்வேறு தரப்பிலும் உள்ள, பல அப்பாவி பொதுமக்களும் கொத்து கொத்தாய் மடிந்து வருவதோடு, மாடுகளும் அந்த விபத்தில் செத்து மடிவதும் தொடர்ந்து வருகிறது.

அதே நேரத்தில் இதுபோன்று இயங்கிவரும் பல்லாயிரக்கணக்கான வாகனங்களில், ஒரு வாகனத்திற்கு 25,000 ரூபாய் லஞ்சம் பெற்றுக் கொண்டு ஒட்டன்சத்திரத்தில் பணிபுரிந்த மோட்டார் வாகன அதிகாரியான

இறையன்பு ஐ.ஏ.எஸ்., பனீந்திர ரெட்டி ஐ.ஏ.எஸ்., நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்.,







பூங்குழலி மற்றும் ஒட்டன்சத்திரத்தில் பணிபுரிந்த MVI செல்வி (தற்போது உசிலம்பட்டியில் பணிபுரிபவர்) ஆகியோராலும் பல பல தகுதிச் சான்றுகள் வழங்கப் பட்டுள்ளது. (ஆதாரம் என்னிடத்தில் உள்ளது). ஆனால் இதற்கான தண்டனைக்குரிய நடவடிக்கைகள் மட்டும் அந்த குற்றம் புரிந்த அதிகாரிகள் மீது, போக்குவரத்து உயரதிகாரிகளால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

மேலும் இது குறித்தும் நம்மால் பல புகார்கள் ஆதாரத் துடன் வாகன பதிவு எண்களோடு குற்றஞ் சாட்டப்பட்டும் இன்னும் விசாரணைகள் நிலுவையில் இருந்து வருகிறதே தவிர அதற்கும், அந்த அதிகாரி களுக்கான உரிய தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப் படாமல் காலம் தள்ளப்பட்டுக்கொண்டே உள்ளது.

அதேநேரத்தில் அந்த அதிகாரிக்கு மட்டும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு, அவரது அதிகார வரம்பினை அதிகரிக்க செய்து விபத்தை பெருக்க மட்டும் போக்குவரத்து துறை அனுமதித்து வருவதுதான், கொடுமையிலும் கொடுமையாக உள்ளது



எனவே, தற்போது புதிதாக பொறுப்பேற்ற அதிரடியான ஆணையர் நிர்மல்ராஜ் IAS அவர்கள் இது போன்ற வாகனங் களை சிறைப்பிடிக்க உத்தர விடுவதோடு, நம்மால் வழங்கப் பட்ட அந்த புகார் மனுக்களை எல்லாம் தூசி தட்டி உரிய விசாரணை செய்வதோடு, இது போன்ற வாகனங்களுக்கு FC கொடுத்த அந்த அதிகாரிகள் கையெப்பம் இட்ட அனைத்து ஆவணங் களையும் மறு ஆய்வு செய்து, அந்தந்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும், மாடுகள் போல் பொதுச்சாலைகளில் திரியும் அந்தந்த வாகனங்களுக்கு எல்லாம் உடனே (CSF) வழங்கப்பட்டு தகுதிச்சான்றிதழ்களை ரத்து செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் மட்டும்தான், இந்த வாகனங்களால் ஏற்படும் மனித உயிர்பலிகளும், மனிதர்களின் முன்னேற்றத்திற்கு ‘மாடாய்’ உழைத்த, அந்த மாடுகளின் உயிர் பலிகளையும் தடுக்க முடியும்.

நேர்மையான ஆணையரும், அதிரடியான அமைச்சரும் உரிய கவனம் செலுத்தி கடும் நடவடிக்கை காண்பார்களா ? பொறுத்திருந்து பார்ப்போம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

02–08–2022








